# இயேசு காவியம் குறிப்பிடும் வாழ்வியல் சிந்தனைகள்

முனைவர் க. கலாவதி
உதவிப்பேராசிரியர் தமிழ்த்துறை
அவினாசிலிங்கம் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர்.



விவிலிய நூலின் ஒரு பகுதியான நற்செய்தியை கவிஞர் கண்ணதாசனின் கை வண்ணத்தில் கவிதை வடிவில் காவியமாக உருவானதே இயேசு காவியமாகும். தமிழன்னைக்கு அணி செய்யும் சமய இலக்கியங்களில் இயேசு காவியமும் ஒன்றாகும்.

இறைமகன் இயேசுவின் வரலாற்றை வடித்தல் ஒரு புனிதமான செயல் என்று கவிஞர் அவர்களே கூறியுள்ளார். கவியரசர் கண்ணதாசன் வாழ்வின் இறுதியில் எழுதிய இறவாக் காவியமே இயேசு காவியம் ஆகும். இக்காவியத்தில் அமைந்துள்ள வாழ்வியல் கருத்துகளை வெளிக்கொணர்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**"நகையுள்ளும்
இன்னாது
இகழ்ச்சி
பகையுள்ளும்
பண்புள
பாடறிவார்
மாட்டு"**

**மக்கள் தொகை கணக்கெடுப்பு**

உலகில் முதன்முதலாக உரோம சாம்ராஜ்ஜியத்தின் அதிபர் சேசார் அகுஸ்துஸ் என்பவன் மக்கள் தொகை கணக்கெடுப்பினை தொடங்கி வைத்தான் என்பது வியத்தகு செய்தியாக விளங்குகின்றது. உரோம் நகரைவிட்டு வேற்றுநகரில் வாழும் அனைவரும் உரோம் நகருக்குச் சென்று மக்கள் தொகை கணக்கெடுப்பில் அதிபரது ஆணையை ஏற்று உரோம நாட்டின் சிற்றரசனான சிரியா கலந்து கொள்ள ஆணையிட்டான். அதன்படி சூசையும், மரியும் பெத்லெகேம் நகருக்குச் சென்றனர் என்ற செய்தியை நாம் இயேசு காவியம் வழி அறியமுடிகிறது.

மக்கள்தொகை கணக்கெடுப்பின் மூலம் சொந்த நாட்டில் வாழ்பவர், பிற நாடுகளில் தங்கள் பிழைப்பிற்காகச் சென்று வாழ்பவர்களை கணக்கில் கொள்வதால் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும் என்று அரசர்கள் எண்ணினர்.

**அவரவர் ஊரில் அவரவர் இருந்து**
**குடிக்கணக் கெடுக்கும் கோன்முறைச் செயலுக்கு**
**உதவும் படிக்கு உத்தர விட்டான்**
**சேசாரின் கீழ் சிற்றர சான**
**சிரியா வேந்தன் இச்செய்தியைச் சொன்னான்** (பக்.2)

**மத நல்லிணக்கம்**

பெத்லெகேம் நகரில் மாட்டுத் தொழுவத்தில் அவதரித்தார் இயேசு. உலகப்பிதா அவதரித்த செய்தியை உலகறியச் செய்ய எண்ணிய தேவ தூதர்கள் வானில் தோன்றி,

**ஆயர் மக்களே! ஆயர் மக்களே!**
**அருள்மொழி வல்ல திரு அவதாரன்**
**பாவங்கள் நீக்கும் தேவ குமாரன்**
**கைத்துணி ஒன்றில் கண்களைத் திறந்து**
**ஆநிரைத் தொழுவில் அவதரித் துள்ளான்!**
**அன்னான் ஒளியைக் கண்ணால் பருக**
**முன்னால் நடந்து மூளுக ஒன்றாய்!**
**ஆண்டவர் குமாரன் அவதரித் ததனால்**
**ஆண்டவர் மகிமை அதிகரித் துள்ளது!**
**அவரது கருணை அமையப் பெற்றோர்**
**அமைதி பெறும்நாள் அருகினில் வந்தது** (பக்.22-23)

என்று கூறிச் சென்றனர்.

இந்துசமயம் தழுவிய முல்லை நிலமக்களான ஆயர்கள் திருமாலை வணங்கி வாழ்பவர்கள். இவர்கள் தேவதூதர்களின் செய்தி கேட்டு இயேசுவை மாட்டுத் தொழுவத்தில் கண்டு மகிழ்ந்தனர் என்பதன் வழி **மத நல்லிணக்கம்** வெளிப்படுகிறது.

'இயேசுநாதனைப் பற்றி ஒவ்வொரு சிற்றூரின் மூலைமுடுக்குகளிலும் பிரசாரம் செய்யுங்கள்' என்று நம் நாட்டு அறிஞர் ஒருவர் கட்டளையிட்டார். 'உலகெங்கும் போய்ப் படைப்பிற்கெல்லாம் நற்செய்தியினை அறிவியுங்கள்' என்ற இயேசுவின் நற்செய்தியின் எதிரொலியாக அமைந்த சுவாமி விவேகானந்தரின் இப்பொன்மொழி மத நல்லிணக்கத்திற்குச் சான்றாக அமைகின்றது.

**தாயின் கடமை**

**'ஈன்று புறந் தருதல் என்தலை கடனே'** என்ற புறநானூற்றுப் பாடலடியை



மெய்ப்பிக்கும் வகையில் திருக்குமரனாம் இயேசுவை இவ்வுலகிற்கு தந்தவர் மரியன்னை. கன்னியாக இருந்தபோது தேவதூதரான காபிரியேல் மரியாளிடம் இம்மையில் மறுமை காட்டும் தேவகுமாரன் உன் வயிற்றில் உதிப்பான் என்று கூறினார். அதனைக் கேட்டு அதிர்ச்சி அடைந்த மரியாள்,

**நன்றுநீ சொன்ன சேதி**
**நானொரு விளக்கம் கேட்பேன்**
**இன்னும்நான் கணவர் ஏற்று**
**இல்லறம் அடைந்தே னில்லை**
**என்னனம் மகனைக் காண்பேன்**
**ஏனிந்த வார்த்தை? என்றாள்** (ப.11)

கன்னியாக இருக்கும் நான் கருவைச் சுமப்பது எப்படி? என்று மரியாள் வருந்தினாலும் தேவகுமாரனை பெற்றெடுக்கும் வாய்ப்பினை பெற்ற பேறுடையவளாக தன்னை எண்ணி பெருமை கொண்டு **தாயின் கடமையை** நிறைவேற்றியவள் மரியாள்.

**செவிச் செல்வம்**

சூசை, மரியாள், இயேசு என்னும் அற்புதக் குடும்பம் ஒருநாள் ஜெருசலம் நகரில் பாஸ்கா என்னும் திருநாள் காணச் சென்றனர். பாஸ்கா என்று யூதர்கள் பகரும் அந்தத் திருநாள் அடிமையை மீட்டு விடுதலை வழங்கிய நாளாகும் என்று கவிஞர் குறிப்பிட்டுள்ளார். திருநாள் பார்க்கச் சென்ற வழியில் இயேசுவைக் காணாது பெற்றோர் வருந்தினர். இரண்டு நாட்கள் தேடியதன் முடிவில் ஒரு தேவாலயத்தினுள் இயேசுவைக் கண்டனர்.

**அங்கே இயேசு ஆலயத் துள்ளே**
**வேதம் படித்த வித்தகர் நடுவே**
**கேட்டும் அறிந்தும் கேள்விகள் தொடுத்தும்**
**தத்துவ ஞானம் தன்னில் இருந்தார்** (ப.43)

இக்கவிதை வரிகள் இயேசு பெற்ற **செவிச்செல்வத்தின்** சிறப்பினை எடுத்துரைக்கின்றன.

**இரக்கம்**

பிற உயிர்கள் துன்பப் படும்போது இயல்பாக ஏற்படுகின்ற மனவருத்தத்திற்கு இரக்கம் என்று பெயர். பிறர் அல்லல் கண்டு அதன் பயனாக உள்ளத்தில் ஏற்படுகின்ற உள்ள நெகிழ்ச்சியே இரக்கமாகும். இத்தகைய உயர்ந்த பண்பான இரக்கம் உடையோர் பேறு பெற்றோர் என இயேசு குறிப்பிடுகிறார்.

**இரக்கம் உடையோர் பேறுபெற் றோரென**
**இயேசுபிரான் சொன்னார் - அவர்**
**இரக்கம் காட்டி இரக்கத்தைப் பெறுவர்**
**இதுதான் பரிசென்றார்**
**...............................**

எல்லாம் இருந்தும் மனிதர்கள் நெஞ்சில்
இரக்கம் தானில்லை (பக்.95-96)

என்ற கவிதை வரிகள் இரக்கமில்லாதவர்களே இத்தகைய அறமற்ற செயல்களைச் செய்வர் என்பதை எடுத்துக் கூறுகின்றன.

**ஆசை**

**வாயும் வயிறும் ஆசையில் விழுந்தால்**
**வாழ்க்கை பாலைவனம் அவர்**
**தூய மனத்தில் வாழ நினைத்தால்**
**எல்லாம் சோலை வனம்** (ப.96)

என்னும் கவிதை வழி துன்பத்திற்குக் காரயமாக அமையும் ஆசையை ஒழிக்க வேண்டுகின்றார் இயேசு.

ஆசையே துன்பத்திற்குக் காரணம் என்று உணர்ந்தன் விளைவே புத்தர் துறவியானார். அதனால் மனிதன் ஆசையை அறவே ஒழித்தால் உயர்வடையலாம். மனிதன் மனிதனாக வாழவேண்டுமெனில் ஆசையை அறவே ஒழிக்க வேண்டும் என்று அற இலக்கியங்கள் குறிப்பிடுவது போல இயேசு காவியமும் குறிப்பிடுகின்றது.

**யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்**
**அதனின் அதனின் இலன்** (குறள்.341)

என்ற குறள் எடுத்துரைக்கின்றது. ஒருவன் எந்தெந்தப் பொருள்களில் இருந்து ஆசையை அறுத்துக் கொண்டு பற்று அற்றவனாக இருக்கிறானோ அவன் துன்பம் அடைவதில்லை என குறிப்பிடுகின்றது.

மனிதர்கள் மீது பகைகொண்டு இறைவனுக்கு மடிநிறையக் காணிக்கை செலுத்துவதை விட பகைவனையும் உறவாகச் செய்வதே புண்ணியத்தைக் கொடுக்கும். உற்றார் உறவினர் நண்பர்களிடத்து மட்டுமல்ல பகைவர்களிடத்திலும் பண்புடன் நடந்து கொள்ள வேண்டும். அதுவே சிறந்த பண்பாகும் என வள்ளுவரும்,

**நகையுள்ளும் இன்னாது இகழ்ச்சி பகையுள்ளும்**
**பண்புள பாடறிவார் மாட்டு** (குறள்.995)

இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

**பகைவனுக்கு அருள்வாய் நன்நெஞ்சே**
**பகைவனுக்கு அருள்வாய்**

என்று பாரதியும் பகைவனை நேசிக்குமாறு கூறுகின்றார்.

**இனியவர்கள் அனைவரொடும் உறவு கொண்டு**
**எதனைநீ கொடுத்தாலும் இறைவன் ஏற்பான்**
**மனிதநிலை கடவுளினால் அமைந்த தன்றோ**
**மயங்காதே என்றுரைத்தார் இயேசு நாதர்** (ப.99)



ஊருக்குத் தீமைகள் செய்து உன் உள்ளம் மகிழ்வது பாவம் அதனால் யாருக்கும் தீமையில்லாமல் அழிந்து விடுவதே நல்லது என்றும், கண்ணொன்று தீங்கு செய்தாலே அந்தக் அந்தக் கண்ணைப் பிடுங்கிட வேண்டும் என்றும், பொய்ச்சத்தியம் செய்தால் வேதனையே மிஞ்சும் என்றும், இரத்ததிற்கு இரத்தம் என்று பகை பாராட்டாமல் வாழவேண்டும் என்றும் இயேசு காவியம் குறிப்பிடுகின்றது.

**உன்னொரு கன்னத்தில் இட்டால் - நீ**
**ஓங்கி அடித்து விடாதே**
**இன்னொரு கன்னத்தைக் காட்டு - இது**
**என்றென்றும் ஞானத்தின் பாட்டு** (ப.101)

என்ற கவிஞரின் கவிதை வரிகள் இன்னா செய்தாருக்கும் இனியன செய்யுமாறு கூறுகின்றன.

**மண்ணில் சேர்க்கும் மாபெரும் பொருளை**
**எண்ணரும் பூச்சிகள் எளிதில் அரிக்கலாம்**
**கள்வர் திருடிக் கரைந்தும் போகலாம்**
**செல்வம் அழிந்து சிதைந்தும் போகலாம்** (ப.107)

அதனால் பொருளாசையை நீக்கி, மண்ணகப் பொருளில் மகத்துவம் இல்லை என்பதையும் அறிந்து வாழவேண்டும். பறக்கும் பறவைகள் விதைப்பதும் இல்லை அறுப்பதும் இல்லை. வீணே சேர்த்துக் குவிப்பதும் இல்லை என்ற உவமை மூலம் மானிடர்கள் நிலையற்ற செல்வத்தைச் சேர்க்க எண்ணவேண்டாம் என இயேசு காவியம் கூறுகின்றது.

இயேசுவின் சீடர்களில் ஒருவனான யூதாஸ் முப்பது வெள்ளி காசுகளுக்காக அவரை முத்தமிட்டுக் காட்டிக்கொடுத்தான். அவனை நோக்கி,

**மோதுகின்ற அன்புடை நண்பனே**
**முத்த மிட்டுக் காட்டிக் கொடுக்கவோ**
**காத லோடு என்முனம் வந்துள்ளாய்**
**கடவுள் தம்மை உனக்கென வேண்டுவேன்** (ப.335)

எனக் கூறி அந்த வஞ்சக நண்பனை வாழ்த்தினார்.

கள்ளமிலாத் திருக்குமரனைக் காட்டிக்கொடுத்த யூதாஸ்க்கு உள்ளமெல்லாம் தீயாக உடல்முழுதும் நோயாக பெற்ற பணம் முழுவதையும் எடுத்துச் சென்று,

**பொய்க்காகப் பணம்தந்தீர் புனிதமிகு பெரியோன்மேல்**
**பொய்சொன் னேன்யான்**
**வைக்காத கொள்ளியெலாம் வைத்துவிட்டேன் மாபாவம்**
**வளர்த்துக் கொண்டேன்**
**இக்காசு எனக்கெதற்கு? எனக்கூறி அவர்முன்னே**
**ஏங்கி நின்றான்** (ப.354)

என்ற கண்ணதாசனின் கவிதை செய்த தவறை உணர்ந்து மனம் திருந்தினால் அவனே உயர்ந்தவன் என்பதை உணர்த்துகின்றது.

சிலுவையில் தொங்கிக் கொண்டிருந்த இயேசுவைப் பார்த்து

**இயேசுவே நீதான் இறைவன் மகனா?**
**இறங்கிவா பார்ப்போம் என்று சிரித்தான்**

(ப.367)

யூதன் ஒருவன் இதனைக் கேட்ட இயேசு,

**அன்புடனே ஒரு அருள்மொழி சொன்னார்**
**தந்தாய் இவரைத் தாம் மன்னிப்பீர்**
**செய்வது அறியாது செய்கின் றார்கள்**

என்று தம் பிதாவிடம் அவனுக்காக மன்றாடினார். இயேசுக்கு அருகில் சிலுவையில் தொங்கிக் கொண்டிருந்த திருடன் ஒருவன்

**மீட்பர் நீரோ மீட்பிர் உமையே**
**வேதனை யின்றி மீட்பீர் எமையே**

(ப.367)

என்று கூறக் கேட்ட இயேசு பொறுமையாக அவனையும் மன்னித்தார்.

நிறைவாக

**தட்டுங்கள் திறக்கப்படும்**
**கேளுங்கள் கொடுக்கப்படும்**
**தேடுங்கள் கண்டடைவீர்கள்**
**தேவன்வீடு சென்றடைவீர்கள்**

என்ற இயேசு காவியத்தின் கவிதை வரிகள் உலக வாழ்வியல் சிந்தனைகளை நான்கே அடிகளில் முழுமையாக வெளிப்படுத்தியுள்ளன.